REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 13உ வியாழன் (28—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 14உ வெள்ளி (29—11—57) [இதழ் 143

நெய்வேலி, சேலம் திட்டங்களுக்கு வேட்டு!

உதகை, நவ. 27—

நெய்வேலியில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள உரத் தொழிற்சாலையும், சேலத்தில் நிறுவப்படவிருக்கும் அலுமினியம் தொழிற்சாலையும் கைவிடப்படும் என்றும், இது இரண்டாம் திட்டத்தைத் திருத்தி அமைக்க உத்தேசித்திருப்பதின் விளைவு என்றும் விவகாரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றனவாம்!

'வடநாடு ஐரோப்பா போன்று தொழில் துறையில் வளருகிறது'

'பெரிய தொழில்களை வடக்கேதான் காண்கிறோம்'

அமெரிக்கப் பொருளாதார விரிவுரையாளர் குழுவின் கருத்து

சென்னை, நவ. 28—

"எங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பலதுறைப்பட்டவர்களாக இங்கு வந்துள்ள நாங்கள், இந்தப் பெரிய நாட்டின் பல்வேறு மாநிலங்களையும் கண்டு களித்தோம்.

"எனக்கு சென்னை மக்களின் வாழ்க்கைமுறையும், கலாச்சாரமும், சிற்பக் கலையும் கவர்ச்சியை யூட்டியுள்ளன.

"நான் எங்கிருந்து வந்தேனோ அந்தப் பகுதிக்கு ஈடாக உள்ளது, சென்னை மாநிலம்!

"இந்தியாவின் வடபகுதியோ ஐரோப்பாபோன்று காட்சியளிக்கிறது; ஐரோப்பாவைப் போலவே அங்கு, எஃகு, இரும்புத் தொழில்கள் ஏராளமாக உள்ளன"

என்று, அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்து நாட்டின் திட்டப்பகுதிகளைப் பார்வையிட்டுவரும் பொருளாதார விரிவுரையாளர் குழுவின் சார்பில் சான் டபிள்யூ. லவ் என்பார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் கன்னிமாரா ஒட்டலில் இந்த அமெரிக்கப் பொருளாதார விரிவுரையாளர் குழுவிற்கு அளிக்கப்பட்ட விருந்திற்கு மாநிலகவர்னர், தலைமை நீதிபதி, அமைச்சர் பக்தவத்சலம் முதலியோர் வந்திருந்தினர்; விழா 24—11—57 அன்று நடைபெற்றுள்ளது.

'தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது' என்பதை, அமெரிக்காவிலிருந்து வந்து 18 நாட்கள் இந்தியாவைச் சுற்றிப் பார்த்தவர் கூறும் இந்தக் கருத்திலிருந்து தெளிவாகக் காணலாம்.

மேலும், 'வடநாடு ஐரோப்பா போன்று வளருகிறது; இரும்பு எஃகுத் தொழில்கள் அங்கே குவிந்துள்ளன' என்று அவர் கூறியுள்ளதிலிருந்து, திட்டம் யாருக்குப் பயனளித்துள்ளது என்பதையும், எந்தப் பகுதி தொழில்மயமாக்கப்பட்டு வருகிறது என்பதையும் உணரலாம்—சிந்திக்கும் ஆற்றல் இருப்பின்!

தென்னாடு தொழில்துறையில் பின்தங்கிக்கிடக்கிறது என்பதை அமெரிக்கர் மட்டுமல்ல; ரஷ்யர்களும் உணர்ந்து அதை வெளிப்படுத்தியுள்ளனர்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு இரஷ்யத் தலைவர்களான புல்கானின், குருஷேவ் இந்தியாவுக்கு வந்து சென்றபின், இந்தியாவுக்கு ரஷ்ய உதவி பற்றி அவர்கள் இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிய ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை சென்னை 'மெயில்' இதழில் 21—1—56-ல் வந்துள்ளபடி தந்துள்ளோம்:—

"தொழில்துறையில் தென்பகுதி பின்தங்கிக் கிடப்பதாகவும் அதன் பலனாகத் தங்கள் உதவியில் தென் பகுதிக்கே உயர்ந்த முதலிடம் தரப்பட வேண்டும் எனவும், ரஷ்யர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது."

சென்னை, நவ. 28—

சென்னை நகரசபைத் தலைவர் தேர்தலுக்கு டாக்டர் எம். சந்தோஷம், திருமதி தாரா செரியன் ஆகிய இருவரும் போட்டியிடுகின்றனர்; தேர்தல் 30—11—57 அன்று நடைபெறும்.

ரூர்கேலாவில் மதுவிலக்குத் திட்டம் கைவிடப்பட்டது!

காரணம் கூறுகிறார் ஒரிசா மந்திரி

புவனேசுவரம், நவ. 27—

ரூர்கேலா பிரதேசத்தில் மதுவிலக்குத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதாம்.

இதற்கான காரணத்தை ஒரிசா ரெவினியூ மந்திரி விளக்கியிருக்கிறார்.

ரூர்கேலா ஒரு தொழில் பிரதேசமாக வளர்ந்துவிட்டதாம்! பெரும்பாலும் அங்கு அன்னிய நாட்டவரே வசிக்கின்றனராம்! அத்துடன், அங்கு மதுவிலக்குத் திட்டமும் தோல்வியுற்றுவிட்டதாம்!

மேலும், அதனை அடுத்து மதுவிலக்கு அமுலாகாத பிரதேசங்கள் இருக்கின்றனவாம்! இதனால்தான், 1956-ல் அமுல் செய்யப்பட்ட மதுவிலகுத் திட்டம் மூன்று மாதங்களுக்கு முன் கைவிடப்பட்டதாம்!

ஊழியர்கள் மிரட்டுகின்றனராம்!

பண்டிதர் கூறுகிறார்

இந்துஸ்தான் விமான தொழிற்சாலை ஊழியர் வேலைநிறுத்தம் பற்றியும், ஊழியர்களின் கோரிக்கைகளைப்பற்றியும் பண்டித நேரு மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதாக மிரட்டுவது சரியல்ல என்று இந்திய அரசாங்கம் கருதுகிறதாம்!

தனியார் துறைக்கு உதவி

புதுடில்லி, நவ. 27—

இந்திய அரசாங்கம் தனியார் துறையில் இயங்கும் தொழில்களுக்கு ஊக்கமளிப்பதற்காக நிறுவியுள்ள 'தொழில் நிதி நிறுவனம்' இதுவரையில் ரூ. 10 கோடி கடனாக விநியோகித்துள்ளதாம்.

மேலும் ரூ. 5 கோடி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

குடும்பஅடிப்படையில் உணவுப் பங்கீடு

பம்பாயில் அமுலாகும்

பம்பாய், நவ. 27—

பம்பாய் மாநில அரசாங்கம் குடும்ப அடிப்படையில் உணவுத் தானியங்களை விநியோகிக்கும் முறையை அமுலாக்க முடிவு செய்துள்ளது. இந்த ஏற்பாட்டின்கீழ், குடும்பத் தலைவர்களாக உள்ளவர்களிடம் குறிப்பிட்ட அளவு உணவுத் தானியம் தருவதற்கான அச்சடித்த அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும்.

'1965-ம் ஆண்டுக்குப் பிறகும் ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்கவேண்டும்'

'நிர்ணயித்துள்ள காலத்தில் இந்தி ஆட்சிமொழியாகிவிட முடியாது'

'இந்திபேசாத மக்களுக்குப் பாதுகாப்பு தேவை'

சர்க்கார் கூட்டிய சர்வகட்சி மாநாட்டு முடிவுகள்

சென்னை, நவ. 27—

இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சி மொழியாக—ஆங்கிலத்திற்குப் பதில்—திணிக்கப்பட்டுவரும் இந்திபற்றி கருத்தறிவிப்பதற்காக, பல கட்சித் தலைவர்களையும் மாநில சர்க்கார் இன்று கூட்டி வைத்துப் பேசியது.

இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசுகளைப் பரிசீலிக்கும்நோக்கத்துடன் சர்க்கார் கூட்டிய அந்த மாநாட்டில், தி. மு. கழக சட்டசபைக் கட்சித் தலைவர் அண்ணா அவர்களும், தேசிய ஜனநாயகக் காங்கிரஸ் கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி முதலியார், மேல்சபை எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார், கம்யூனிஸ்டு கட்சி சார்பில் பி. இராமமூர்த்தி, பி. சோ. கட்சித் தலைவர் பி. எஸ். சின்னதுரை, சோஷலிஸ்டு கட்சித் தலைவர் பக்கிரிசாமிப் பிள்ளை, மற்றும் கே. பாலசுப்பிரமணிய அய்யர், டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, ரஜாகான், சர்தார் வேதரத்தினம் பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் துவக்கத்தில் முதலமைச்சர் காமராசர் பேசினார்; பின், நிதி மந்திரி சுப்பிரமணியம், ஆட்சிமொழிப் பிரச்சினைபற்றி விளக்கினார்.

அண்ணா அவர்கள், கழகத்தின் கொள்கையைத் தெளிவுபட எடுத்துரைத்தார்.

பின்னர், மீண்டும் டிசம்பர் 10-ந் தேதி கூடுவது என முடிவு செய்யப்பட்டது.

ஆட்சி மொழி பற்றி, இன்று தெரிவிக்கப்பட்ட கருத்தினை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றக் குழுவிற்குத் தர வேண்டிய நகல் அறிக்கை தயாரிக்கப்படும் என்றும், டிசம்பர் 10-ந் தேதியன்று கூடும்போது அதுபற்றி விவாதிப்பது என்றும் முடிவாகியது.

பின்னர் பத்திரிகையாளரிடம் பேசிய நிதி மந்திரி, ஆட்சிமொழி குழுவிடம் சென்னை சர்க்கார் தந்த அறிக்கைக்குப் பொதுவாக எல்லாக் கட்சித் தலைவர்களும் சம்மதம் தெரிவித்தனர் என்றும் இப்போது பாராளுமன்றக் குழுவிடம் தர வேண்டிய அறிக்கை பற்றி டிசம்பர் 10-ந் தேதி கூடி விவாதிக்கப்படும் என்றும் கூறினார்.

சர்க்கார் இந்தித் திணிப்புக் குழுவிடம் தந்த அறிக்கையில்,

(1) 1965 என்ற நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் இந்தி ஆங்கிலத்தின் இடத்தில் அமர முடியாது;

(2) 1965-ம் ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலமும், இந்தியும் ஆட்சி மொழிகளாக நீடிக்க வேண்டும்;

(3) அகில இந்திய சர்வீசுகளுக்கான தேர்வில், இந்தி பேசாத மக்களுக்கு ஆங்கிலத்திலோ, இந்தியிலோ—எதில் வேண்டுமானாலும் பரீட்சைஎழுதலாம் என்பது போன்ற பாதுகாப்புத் தரப்பட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர்.

பெரியார் விடுதலையானார்

திருச்சி, நவ. 27—

நேற்று முன்தினம் இங்கு சிறைப்படுத்தப்பட்ட பெரியார் அவர்கள் இன்று காலை விடுதலை செய்யப்பட்டார்.

அவரை மூன்று நாள் பாதுகாப்பில் வைத்திருக்க உத்தரவிட்ட அடிஷனல் நீதிபதியே அவரை விடுதலை செய்திருக்கிறார்.

மாநிலத்தில் அரிசி, நெல் கொள்முதல் செய்ய

ரெவினியூ இலாகாவினருக்கு அதிகாரம்

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, நவ. 27—

மாநிலத்தில் எவரிடமிருந்தும் அரிசி, நெல் முதலியவைகளைக் கொள்முதல் செய்வதற்கு ரெவினியூ அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கும் உத்தரவு ஒன்றினை சென்னை சர்க்கார் பிறப்பித்துள்ளனர்.

அரிசி, நெல் ஆகிய உணவுப் பொருள்கள் 'ஸ்டாக்' வைத்திருக்கக் கூடிய எவரிடமிருந்தும் முழுவதையுமோ, அல்லது பகுதியையோ, அத்தியாவசியப் பொருள்கள் சட்டம் விதிக்கிற விலைக்குக் கொள்முதல் செய்வதற்கு 'சிவில் சப்ளை' இலாகா கமிஷனர், மாவட்ட கலெக்டர்கள், ரெவினியூ அதிகாரிகள் ஆகியோருக்கு சட்டம் அதிகாரமளிக்கிறது.

அரிசி பதுக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவும், நியாய விலையில் மக்களுக்கு அது கிடைக்கவும் ஏற்பாடு செய்வதே சர்க்காரது இந்த உத்தரவின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

"இந்திய சர்க்கார் உலக பாங்கியிடமிருந்து இதுவரையில் மொத்தம் 3563.4 இலட்சம் டாலர் கடனுதவி பெற்றுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—11—57 வியாழன்

இவையெல்லாம் இங்கே!

விவசாயத்தையே நம்பி வாழும் நாட்டில் வளமிருக்காது—வாட்டமும் வறுமையுந்தான் மக்களைப் பற்றிக்கொண்டு இருக்கும்.

விவசாயத்தையே நம்பி வாழும் நாட்டில் வளமில்லாததோடு, காலப்போக்கில் பெருகிவரும் மக்கள் பெருக்கம் விவசாயத்தில் ஈடுபட வகையில்லாததால், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் பல்லாயிரக் கணக்கானவர் பலியாவர்.

பிறந்த மண்ணில் உயிருடன் இருக்க மார்க்கம் கிடைக்காததால், வேலை தேடி வேறு நாட்டினை நண்ணவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது.

இதன்காரணமாகத்தான் காட்டைத் திருத்தி வயிற்றை நிரப்ப, தங்களுக்குள்ளாகப் போட்டியிட்டுக் கொண்டு இலங்கை நாட்டுக்கு தமிழ் மக்கள் கடல்கடந்து சென்றனர்.

இதே காரணத்தால்தான் இரப்பர் பால் எடுக்க, மலாயா சென்றனர் தமிழ் மக்கள்.

தமிழ் மக்கள் பர்மா சென்று குடியேறியதும் இதே வயிற்றுப்பாட்டுக்குத்தான்.

தமிழ் மக்களின் குடியேற்ற சோகக் கதை கடல் கடந்த அளவுடன் இருந்துவிடவில்லை!

இந்தியத் துணைக்கண்டத்தில் தொழில்வளம் மிகுந்த பம்பாய், அகமதாபாத் போன்ற வடநாட்டு நகரங்களுக்கும், அங்குள்ள தொழிற்சாலைகளில் பணி தேடி தமிழ் மக்கள் குடியேறினர்.

ஏற்கனவே, இங்கே தமிழகத்தில் வாட்டம் இருந்தது—வறுமை மிகுந்திருந்தது.

தாயகத்தில் தமிழ் மக்கள் பல இலட்சக்கணக்கானவர் வேலையின்றித் தவித்துக்கிடந்தனர்—வாழ வகையின்றி வாடிக்கிடந்தனர்.

இதே நேரத்தில், வடநாட்டின் பல பகுதிகளில் புதுப் புதுத் தொழில்கள் துவங்கப்பட்டன. அங்குள்ளாருக்குப் புதுவாழ்வு கிடைத்தது.

எனவே, அங்குள்ளார், தமிழ் மக்கள்போல் பல்லாயிரக் கணக்கில் வெளிநாடுகளுக்கு வேலைதேடிச் செல்லாதிருந்தனர்.

பிறந்த வீட்டிலேயே அவர்கள், வறுமை நீங்கி வாழ்ந்தனர்.

ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்றது! அத்துடன் தமது வறுமையும் நீங்கக்கூடும் எனத் தமிழ் மக்கள் உறுதியாக நம்பிப் பூரித்திருந்தனர்!

• 'நம்மவர்' ஆட்சியில் புதுப் புது தொழில் திட்டங்கள் அரங்கேற்றப்படும் — அதன் விளைவாகத் தங்கள் துயர் துடைக்கப்பட்டு வாழ வகை செய்யப்படும் எனத் தமிழ் மக்கள் நினைந்து நினைந்து மகிழ்ந்திருந்தனர்!

'நம்மவர்' திட்டமும் தீட்டினர்! நவீனத் தொழில்கள் பல துவங்கவும் செய்தனர்!

அவை ஒன்றேனும் தமிழகத்தில் இடம் பெறவில்லை. தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

முதல் திட்டம்தான் முடிந்துவிட்டதே—இரண்டாவது திட்டத்திலாவது தொழில்துறையில் தனக்குரிய பங்கினைத் தமிழகம் பெறாமலா போகும் என, 'நம்மவர்' நல்லெண்ணத்தில் நம்பிக்கை இழக்காதிருந்தனர் தமிழ் மக்கள்.

அந்தகோ! அந்த நம்பிக்கையும் நாசமாயிற்று! முதல் திட்டத்தில் ஏற்பட்டதுபோன்றே, இரண்டாவது திட்டத்திலும் தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது.

புதிய தொழில் ஏற்பாடுகள் எதுவும், குறிப்பிடத் தகுந்த அளவில் தமிழகத்தில் இடம் பெறாததின் விளைவாக, அன்றிருந்த அவல வாழ்வைத்தான் இன்றும் தமிழ் மக்கள் அனுபவித்து வரவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

அன்றிருந்த வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத்தான் — தமிழ் மக்கள் இன்றும் ஆளாகி வருகின்றனர்.

வேலைதேடி வெளிநாடு செல்லும் விருப்பம் முன்னிலும் கூடுதலான அளவில் தமிழ் மக்களுக்கு இருந்தாலும், தமிழ் மக்களை முன்போல் ஏற்றுக்கொள்ள வெளிநாடு எதுவும் தயாராக இல்லை.

ஏற்கனவே ஏற்றுக்கொண்ட தமிழ் மக்களின் மரபினரையே, தம்மிடமிருந்து வெளியேற்ற வெளிநாடுகள் பெரும் முயற்சி செய்துவருகின்றன. இந்தச் சூழ்நிலையில் மேலும் தமிழ் மக்கள் வெளிநாடு சென்று வாழ்வு தேடுவது இயலுமா?

தாயகத்திலிருக்கும் தமிழ் மக்களே வேலை கிடைக்காது வேதனைபட்டுக்கொண்டிருக்கும்பொழுது, திரும்பிவரும் வெளிநாடு சென்றவர்களால் வேறு தொல்லையும் தொந்தரவும் கூடுதலாகின்றன.

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக்கொண்டே போகிறது. தமிழ் மக்கள் வாழ்வு மிகமிக விரைந்து சரிந்துகொண்டே இருக்கிறது. 'நம்மவர்' ஆட்சி, தமிழ் மக்கள் இடர் பற்றி கவலையற்று காலங்கழிக்கிறது.

வடநாட்டில் தொழில்வளம் கூடிக்கொண்டே போகிறதே—தமிழகம் தொழில்வளம் பெறாது தேய்கிறதே—இது நீதியா? முறைதானா? எனக் கேட்டால், இங்குள்ள ஊராள்வோர், உடைந்த உள்ளத்துடன் எலும்புருவாய்க் காட்சிதரும் தமிழ் மக்களைப் பார்த்து எதிர்கேள்வி கேட்கின்றனர். எதிர்கேள்வி கேட்டதுடன் நிற்காது 'பேசாது இருந்திடுக! —பொறுத்திடுக! எம்முடன் ஒத்துழைத்திடுக! எதிர்காலத்தில் நல்வாழ்வு கிடைத்திடும் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்திடுக!' எனத் திருவாய் மலர்ந்தருளுகின்றனர் நமது ஊராள்வோர்.

'பசியைப் பொறுப்பதா? பட்டினியைத் தாங்கிக் கொள்வதா? பாராள்வோரே! இவ்வாறு போதிப்பது உங்களுக்கு அழகாகுமா?' என்று தமிழ் மக்களின்வழி ஈனக் குரலில் ஊராள்வோரிடம் பேசாமல் பேசுகிறது.

ஊராள்வோரே விழிக்கின்றனர்! ஊமையாக இருந்திடவும் மறுக்கின்றனர்! உடனே உபதேசம் செய்யப் புறப்படுகின்றனர்!

'இந்தியத் துணைக் கண்டத்துடன் இணைந்துள்ள இலாபத்தினை நீங்கள் மறவாதீர்! எதிர்காலத்தில் ஏற்றமிகு தொழில்கள் பல உங்களுக்கு வாழ்வளிக்கக் காத்திருக்கின்றன! மூன்றுவது திட்டத்தில் உங்களுக்கு முழு வாழ்வு உண்டு!' என்று ஊராள்வோர், பசித்த வயிறுடன் இருக்கும் தமிழ் மக்களிடம கண்ணாமூச்சு விளையாடுகிறார்கள்.

நம்மவர் போட்ட முதல் இரண்டு திட்டத்தில் தமிழ் மக்கள் பெற்றுள்ள பங்கினை தெரிந்துள்ளவர், மூன்றுவது திட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் பெற இருப்பதை, திட்டவட்டமாகத் தெரிந்துகொள்வது இயலும்.

முதல் இரண்டு திட்டத்தையும் தந்த 'நம்மவர்' ஆட்சி, தமிழ் மக்கள் நெற்றியிலும், வயிற்றிலும் மற்றும் உடலிலும் 'இல்லாமை' என்ற சூட்டுக்கோல் கொண்டு பட்டை நாமம் சாற்றி இருக்கிறது. இதனிலும் மாறுபட்டா 'நம்மவர்' ஆட்சி தரப்போவதாகச் சொல்லப்படும் மூன்றுவது திட்டம் இருக்கப்போகிறது? முக்காலும் இல்லை!

தமிழ் நாட்டில் இயற்கை வளமிருக்கிறது. நவீனத் தொழில்கள் பலப்பல துவங்க மூலப் பொருள்கள் மண்ணுக்கு அடியில் புதைந்து கிடக்கின்றன.

அவைகளைத் தோண்டி எடுக்க, இங்கே-தமிழகத்தில் ஆர்வம் கொண்டிருப்போர் பல்லாயிரவர் உள்ளனர்.

தோண்டியெடுத்த கனிப் பொருட்களைப் பயன்படும் பொருட்களாக ஆக்கித்தர ஆற்றல் படைத்த பெருங்கூட்டம் இங்கு இருந்து வருகிறது.

எல்லாம் இருந்து என்ன பயன்?

இங்கே—தமிழகத்தில் 'நம்மவர்' ஆட்சி நடைபெறவில்லை! 'நம்மவர்' என்ற போர்வையில் வடநாட்டு நலம் பேணுவோர் ஆட்சி இங்கு நடைபெற்று வருகிறது.

இந்தத் திருக்கல்யாண குணம் படைத்த 'நம்மவர்' ஆட்சிப் பிடியிலிருந்து தமிழகம் விடுபட்டாலன்றி, தமிழ் மக்களுக்கு நல்வாழ்வு கிட்டப்போவது என்றும் கிடையாது.

இங்கே, தமிழகத்தில், நாம் இன்று காண்பதெல்லாம் வாட்டம், வறுமை, பஞ்சம், பட்டினி, வேலையின்மை, இல்லாமை, அழுகுரல்!

இவையெல்லாம் இங்கேதான் இருக்கவேண்டுமா? இவ்வினாவிற்கு விடை கண்டு, விடுபடும் மார்க்கம் தேட, அதுவும் இன்றே தேட தமிழ் மக்களைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

உலகின் 'முதல் குடிமகன்!

கேரி டேவிஸ் என்ற ஒரு நபர், பாரிசில், 'நான் உலகின் முதல் குடிமகன்' என்று சொல்லிக்கொண்டு அலைந்தானாம். அவனைப் போலீசார் கைது செய்து, எட்டு நாள் சிறைத் தண்டனை வாங்கித் தந்திருக்கின்றனர்.

அமெரிக்காவில் பிறந்த இவன், பிரான்சிற்குள் வருவதற்கு 'பாஸ்போர்ட்'டோ, அனுமதியோ பெற்றில்லையாம். உலக அபிப்பிராயம்பற்றி 'வாக்கெடுப்பு' நடத்த இவன், இங்கு வந்ததும் வாரதமாய் முயற்சித்தானாம்!

மைசூர் மாநிலத்தின் பெயர்

'கர்நாடகம்' என சீக்கிரமே மாற்றப்படும்!

மைசூர் மாநிலத்தின் பெயர், சீக்கிரமே 'கர்நாடக மாநிலம்' என மாற்றப்படலாம்.

இதற்கான முயற்சியை காங்கிரசாரே மேற்கொள்ளுவர் என்று தெரியவருகிறது.

மைசூர் பிரதேச காங்கிரஸ் கமிட்டி, தனது பெயரை, 'கர்நாடக பிரதேச காங்கிரஸ் கமிட்டி' என மாற்றிக்கொண்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில், இந்தப் பெயர் மாற்றத் தீர்மானம் ஏற்கப்பட்டிருக்கிறது.

இப்படிச் செய்வதற்கு துவக்கத்தில் எதிர்ப்பு இருந்தது என்பதும், பின்னர் இப்போது கமிட்டியின் தலைவரே தீர்மானத்திற்கு ஆதரவு தந்திருப்பதும் குறிப்பிடத்தகுந்தவையாகும்.

அகில இந்திய காங்கிரசிற்கு தீர்மானம், அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருப்பதாகவும், சீக்கிரமே மைசூர் காங்கிரஸ், 'கர்நாடக காங்கிரஸ்' என்று அதிகார பூர்வமாகப் பெயர் மாற்றப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

காங்கிரஸ் தனது பெயரை மாற்றிக்கொண்டதை ஒட்டி, மாநிலத்தின் பெயரும் 'கர்நாடக மாநிலம்' என்றே மாற்றப்பட்டுவிடும் என்று கூறப்படுகிறது. இந்த மாற்றத்திற்கு எவ்விதக் கஷ்டமும் இருக்கும் என்று தோன்றவில்லை என்றும் பெயர் மாற்றப்பட பாராளுமன்ற அனுமதியும், அரசியல் சட்ட திருத்தமும் தேவைப்படும் என்றும் கூறப்படுகிறது.

'தேவையற்றது மட்டுமல்ல-வீணானதும்கூட!'

சமுதாய நல அமைச்சர் பதவியை ஒழித்துவிட யோசனை

புதுடில்லி, நவ. 26—"சமுதாய நல இலாகா மந்திரி பதவியையும், இலாகாவையும் ஒழித்துவிட வேண்டும்" என்று, பி. ஜி. ராவ் ஐ.சி.எஸ். என்பார் யோசனை கூறியுள்ளார்.

திட்டம் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட பல்வந்தராய் மேதா குழுவில் உறுப்பினரான இவர், குழுவின் அறிக்கைக்கு எழுதியுள்ள ஒரு தனிக் குறிப்பில்,

'இந்த மந்திரி இலாகா தேவையற்றது என்பது மட்டுமல்ல—வீணானதும்கூட; மேலும், ஒத்துழைப்புக் குறைவுக்கு வழி செய்யவும், பொறுப்பினைத் தட்டிக்கழிக்க இடம் கொடுப்பதும் ஆகும்" என்றும் கூறியிருக்கிறார்.

சமுதாய நலத் திட்ட வேலைகள், திட்டக் குழுவின் உப பிரிவு ஒன்றின் மேற்பார்வையிலேயே நடைபெறலாம் என்றும் இவர் கூறியுள்ளார்.

"சமூகக் கல்வி அமைப்பாளர் என்ற பதவியையும் திட்டப் பிரதேசங்களில் ஒழித்துக்கட்டிவிட்டு, இதற்காகும் செலவினைக் கொண்டு விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை அதிகரிப்பது பயனுள்ள காரியமாகும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

ரஷ்யாவில் 1914-ல் 1412 ஆக இருந்த திரைப்படம் காட்டும் கருவிகளின் எண்ணிக்கை 1956-ல் 62,422 ஆக உயர்ந்துவிட்டதாம்.

1940-ல் ரஷ்ய நாட்டில் திரைப்படக் காட்சிகளுக்குச் சென்றவர்கள் எண்ணிக்கை 7,91,60,000 ஆகும்; 1950, 1956-ம் ஆண்டுகளில் இவ்வெண்ணிக்கை முறையே 114 கோடியே 40 இலட்சமாகவும். 285 கோடியே 59 இலட்சமாகவும் உயர்ந்துவிட்டதாம்!

1940-ல் சோவியத்து ஸ்டுடியோக்கள் 58 செய்திப்படங்களையும் 147 விஞ்ஞான, கல்விப்படங்களையும் வெளியிட்டன; 1956-ல் இவ்வெண்ணிக்கை முறையே 246 ஆகவும் 273 ஆகவும் உயர்ந்துள்ளனவாம்!

தேசீய அபிவிருத்தித் திட்டம்

பல்வந்தராய் மேதா குழு சிபாரிசுகள்

புதுடில்லி, நவ. 26—"இந்தியா முழுவதையும் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் கொண்டுவருவதற்கான கால வரம்பினை மேலும் மூன்றுண்டுகளுக்கு அதிகரிக்க வேண்டும்"

என்று, சமுதாய நலத் திட்ட வேலைகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட பல்வந்தராய் மேதா குழு அறிவித்துள்ளது.

குழு தனது அறிக்கையில் கூறுவதாவது:—

"சமுதாய அபிவிருத்தி என்பது, 'பிளாக்'குகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதினால் மட்டும் பெற்றுவிடக் கூடியதல்ல; 'பிளாக்'குகளை அதிகரிக்கும் போதே தீவிர வேலைகளையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

"இந்தியா முழுவதையும், இரண்டாம் திட்டகாலத்திற்குள் இந்த தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் கொண்டுவருவது விவேகமானது அல்ல."

குழுவினர் திட்டம் பற்றி மேலும் சில யோசனைகள் கூறியுள்ளனர்.

"தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களின் மூன்று கட்டங்களுக்குப் பதிலாக, ரூ. 15 இலட்சம் அனுமதியுடன், ஆறு ஆண்டுக்காலத்திற்கு அதனை நீடிக்க வேண்டும்; அத்துடன், அடுத்த ஆறாண்டுக் கால தீவிர வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ 5·5 இலட்சம் ஒதுக்க வேண்டும்" என்று குழு கூறியுள்ளது.

முன்னாள் மன்னர்களின் உறவினர்களுக்கு உதவி

நிறுத்தப்பட்டு விட்டதாம்!

புதுடில்லி, நவ. 27—"முன்னாள் மன்னர்களின் உறவினர்களுக்குத் தரப்பட வேண்டிய படிச் செலவுத் தொகைகளை ஒரிசா மாநில அரசாங்கம் கடந்த ஜூலை முதல் நிறுத்திவிட்டது" என்று, மக்கள் சபையில் உள் விவகார அமைச்சர் தத்தார் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுமா?

சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் 'பாக்சைட்'டைக் கொண்டு ஒரு அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் ஆராய்ந்துவருவதாக ஒரு செய்தி வெளியாகியிருந்ததல்லவா?

இதற்கான நிதி வசதி இல்லாத நிலையில் உடனடியாக இத்திட்டம் மேற்கொள்ளப்படமாட்டாது என்று இப்போது டெல்லி நிருபர் ஒருவர் 'மெயில்' இதழில் தெரிவித்துள்ளார்.

சென்னை முதலமைச்சர் காமராசர், மாநிலப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசுகையில், இந்தத் திட்டத்திற்கான ரூ. 66 கோடி செலவில் ரூ. 45 கோடியைத் தனியார் துறையில் திரட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

சேலம் மாக்னசைட் தொழிலை நடத்துவதற்கு முன்வந்த தனி நிறுவனம், கூட்டுப் பங்குதாரராக சேர விரும்பவில்லை எனத் தெரியவருகிறது.

இலாபத்தில் மத்திய அரசுக்கு 40 சதவிகிதமும், சென்னை அரசாங்கத்திற்கு 40 சதவிகிதமும், தனி நிறுவனத்திற்கு 20 சதவிகிதமும் பங்கு முறை என்ற அடிப்படையில் சேலத்தில் மாக்னசைட் தொழிற்சாலை நடத்த சென்னை அரசாங்கம் விரும்புகிறது.

மத்தியப் பிரதேசத்தில் உணவு உற்பத்தி

குறைந்துவிடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாம்

போபால், நவ. 26—

மத்தியப் பிரதேச மாநிலம் சாதாரணமாக தேவைக்கு அதிகமாகவே உணவுத் தானியம் இருக்கும் பகுதியாகும்; இப்போது இந்த மாநிலத்திலும் உணவுப்பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், உற்பத்தியில் 14,82,000 டன் அரிசி குறைந்துவிடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பருவ மழை இல்லாததே இந்த நிலைமைக்குக் காரணமாம்; போதிய தண்ணீர் விவசாயத்திற்குக் கிடைக்கவில்லையாம்.

100 இலட்சம் தொகையுள்ள இம்மாநில மக்களுக்குத் தேவைப்படும் உணவை அளிப்பதில் சர்க்கார் இக்கட்டான நிலையை அடைந்துள்ளது என்று கூறப்படுகிறது.

அறுவடைக்குள்ள கோதுமை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதாம். கடந்த செப்டம்பர் திங்கள் முதல் மழையே இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக, நிலத்தில் விதைகள் சரிவர முளைபடவில்லை என்றும் கூறப்படுகிறது; 25 சதவிகிதம் மட்டுமே பயிராகியுள்ளதாம்.

குடி தண்ணீருக்குக்கூடப் பஞ்சம் ஏற்படுமோ என்று பலர் அஞ்சுகின்றனராம்!

மத்தியப்பிரதேசத்தில் 69,176 கிராமங்கள் உள்ளன என்றும், இப்போது நீர்ப்பாசன வசதிக்காக ரூ. 50,000 செலவிட மாவட்ட அதிகாரிகளிடம் தரப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்க!

பண்டிதர் தரும் யோசனை

புதுடில்லி, நவ 26—

"உணவு உற்பத்தியைத் தீவிரமாக்க வேண்டும்; அதற்காக, ஒவ்வொரு விவசாயியும் இவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டுமென இலட்சிய அளவு கூட நிர்ணயிக்கலாம்" என்று, பண்டிதர் யோசனை தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள், அசோக மேத்தா குழு அறிக்கையை விவாதித்தபோது, மேலும் பேசுகையில் பண்டிதர், சீனா அடுத்த 5 ஆண்டுகளில் உணவு உற்பத்தியை 200 சதவிகிதம் அதிகரிக்கத் திட்டமிட்டிருப்பதாயும், நாமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் 300 முதல் 400 சதவிகிதம்வரை அதிகரிக்க முடியும் என உலக பாங்கி கூறியிருப்பதாயும் கூறினாராம்!

உணவு உற்பத்தியை அதிகரிப்பது என்பது, விளை நிலங்களில் மேலும் அதிகமாக உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதுதான் எனவும், விரிவான இடத்தில் உணவு விளைவித்தால் மட்டும் போதுமானதல்ல—தீவிரமாகவும் உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'பிளேடு' தயாரிப்புத் தொழிலும்

வடநாட்டில்தானு?

பம்பாய், நவ. 27—

"வெளிநாடுகளிலிருந்து 'பிளேடு'களை இறக்குமதி செய்வதை மேலும் மூன்று ஆண்டுகளுக்குத் தடை செய்ய வேண்டும்" என்று, அகில இந்திய 'பிளேடு' உற்பத்தியாளர்கள், மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தற்போது 'பிளேடு' தொழிலில் ஈடுபட்டுள்ள 5 தொழிற்சாலைகள் இந்தியாவில் உள்ளன.

இரண்டு பம்பாயிலும், இரண்டு கல்கத்தாவிலும், ஒன்று உஜ்ஜெயினிலும், ஆக 5-ம் வடநாட்டில் உள்ளன. இவை ஆண்டுக்கு 8,000 இலட்சம் பிளேடுகள் உற்பத்தி செய்கின்றன.

மேலும் இரண்டு தொழிற்சாலைகள்—ஒன்று உ. பி.-யிலும், மற்றொன்று டெல்லியிலும்—ஏற்படுத்தப்படும் என்றும் தெரியவருகிறது.

பொன்மலைப்பட்டி கிளை நூலக ஆண்டுவிழாக் குழு அமைப்பு

பொன்மலைப்பட்டி கிளை நூலகத்தில் 24—11—57 மாலை 7 மணிக்கு நடந்த ஆண்டுவிழா அமைப்புக் கூட்டத்திற்கு திரு. பி. எஸ். பி. நாயுடு தலைமைதாங்கினர். தோழர்கள்: ஆர். ராஜாமணி, ஏ. கோவிந்தசாமி, டி. தாமஸ், எஸ். ஆறுமுகம், முத்துகிருஷ்ணன் ஆகியோர் பேசியபின், வாசகர்கள் ஆண்டுவிழாக் குழுவில் 13 உறுப்பினர்களும், நிர்வாகக் குழுவில் இராமசாமி உடையார் தலைவராகவும், ஆர். ராஜாமணி துணைத் தலைவராகவும், ஏ. கோவிந்தசாமி செயலாளராகவும், ஆறுமுகம் துணைச் செயலாளராகவும், டாக்டர் ஆர். எஸ். பி. நாயுடு பொருளாளராகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

பொன்மலை கிளை நூலக முதலாவது ஆண்டுவிழாவை 15—12—57-ல் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

சென்னை பல்கலைக் கழகப் பேச்சுப் போட்டி

கழக மாணவர் வெற்றி

23-11-57-ல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த பல்கலைக் கழக இடைநிலைப் பேச்சுப் போட்டியில் திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரி மாணவர் இரா. நடராசன் (புதுக்கோட்டை) முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது இவர் சென்னை பல்கலைக் கழகப் பேச்சுப் போட்டியில் பெற்ற மாபெரும் இரண்டாவது வெற்றியாகும்.

இவர் நம் தி. மு. க.-மாணவர் கிளை மத்திய செயற்குழு உறுப்பினர் ஆவார்.

திண்டிவனத்தில் அண்ணு

இளங்கோ மாவு ஆலையைத் திறந்துவைத்தார்

திண்டிவனம் இளங்கோ மாவு ஆலையை அண்ணு அவர்கள் 3—11—57 காலை திறந்துவைத்தார்கள்; திறப்பு விழாவுக்கு திரு. பி. வீரப்ப கவுண்டர் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

நகரசபை உறுப்பினர் திரு. எஸ். நடராசன் அண்ணு அவர்களையும், மற்றவர்களையும் வரவேற்றுப் பேசியபின், அண்ணு அவர்கள் மாவு ஆலையின் மின்விசையை முடுக்கிவிட்டு திறப்புரையாற்றினர்கள்.

மின்சாரம் மேலைநாடுகளிலும், நம் நாட்டிலும் பயன்படும் விதத்தையும், அது எந்த அளவுக்கு இக்காலத்துக்குத் தேவைப்படுகிறது என்பதையும் விளக்கி அண்ணு அவர்கள் உரை நிகழ்த்தினர்கள்.

பின்னர் தோழர் ஆ. தங்கவேலு நன்றிகூற, ஆலை உரிமையாளர் வெ. நடராசன் அவர்களின் விருந்தளிப்புக்குப்பின் விழா இனிது முடிவுற்றது.

துறையூரில் தண்ணீர் பஞ்சம்

துணிவெளுக்க முடியாமல் சலவைத் தொழிலாளர் தவிப்பு

துறையூர் சலவைத் தொழிலாளர் சங்கக்கூட்டம் 21-11-57ல் தோழர் பே. பெருமாள் தலைமையில் கூடியது.

துறையூரில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் துணிவெளுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் எனவே தங்கள் குறைகளை பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியிடம் தெரிவிக்க 20-12-57ல் சலவைத் தொழிலாளர் அனைவரும் ஊர்வலமாகச் சென்று மகசர் கொடுப்பது என்றும், சர்க்காரால் திட்டமிடப்பட்டு நடவடிக்கையிலிருந்துவரும் 'சலவைத்துறை' (டோபிகானு) திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென வற்புறுத்துவதென்றும், மேற்படி தேதியில் துறையூர் சுற்றுவட்டாரத்திலுள்ள 100-க்கு மேற்பட்ட கிராமங்களிலுள்ள சலவைத் தொழிலாளர்களின் கூட்டமொன்று நடத்தி மாநாடு பற்றி யோசிப்பது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் நகராண்மைக் கழக ஊழியர் நாடக சங்க வெள்ளி விழா

சேலம் நகராண்மைக் கழக ஊழியர்கள் நாடக சங்க வெள்ளி விழா இன்று திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் கே. ஆர். கோபால் எல்லோரையும் வரவேற்றார்; சங்க அறிக்கையை செயலாளர் ஏ. சிதம்பரம் பிள்ளை படித்தார். விழாவை வாழ்த்தி பல பிரமுகர்கள் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை துக்காணி ஏ. வரதராசன் படித்தார்.

வெள்ளி விழாவை சேலம் முன்னாள் நகராண்மைக் கழகத் தலைவர் பி. இரத்தினசாமி பிள்ளை துவக்கிவைத்தார்.

விழாவுக்குத் தலைமைவகித்த திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமிழ்மொழியின் தனிச்சிறப்பு குறித்தும் நாடகக் கலையின் நற்பலன்கள் குறித்தும் உரை நிகழ்த்தினர்.

சங்கத்தை நிறுவியவர்களான காலஞ்சென்ற எஸ். ஜி. துரை (நாயுடு,) எஸ். சோமசுந்தரம் ஆகியவர்களின் உருவப்படங்களை சேலம் நகராண்மைக் கழகத் தலைவர் பி. மதுரைப்பிள்ளை திறந்து வைத்தார்.

சங்கத் தலைவர் டாக்டர் கே. ஆர். கோபால் நன்றி கூறியபின் விழா முடிவுற்றது. (ந. நி.)

சேலம் மாவட்ட அபிவிருத்தி வேலைகள்

கலெக்டர்தரும் தகவல்கள்

சேலம், நவ. 25—

சேலம் மாவட்டத் திட்டக் குழுக் கூட்டம் 23—11—57 மாலை கிருஷ்ணகிரியில் மாவட்ட கலெக்டர் எம். ஜி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆண்டு வட்டார அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புது வேலைகள் ஒன்றும் செய்யப்படமாட்டாது என்றும், ஏற்கனவே வேலை துவங்கி பூர்த்தியாகாமல் இருக்கும் வேலைகளைப் பூர்த்தி செய்ய இந்த ஆண்டு ரூ 8,70,000 அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டுள்ளதென்றும், அந்தத் தொகையைச் செலவழிக்கும் காலத்தை 30—9—58 வரை நீடிக்குமாறு அரசாங்கத்தாருக்கு எழுதப்பட்டிருப்பதாகவும் கலெக்டர் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கிருஷ்ணகிரி அணைக்கட்டினுல் ஆரம்பத்தில் 7,500 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு வரும் என்று எதிர்பார்த்ததற்குப் பதில் 9,000 ஏக்கர் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

"தர்மபுரி கூட்டுறவு நெசவாளர் சொசைடியைச் சேர்ந்த நெசவாளர்களுக்காக 100 வீடுகள் கொண்ட நெசவாளர் காலனியை ரூ. 4,25,000 செலவில்கட்ட இந்தியப் போரசினர் அனுமதிவழங்கிவிட்டனர். இந்தத் தொகையில் ரூ. 1,20,000 மானியமாகவும், ரூ. 2,40,000 கடனாகவும் இந்தியப் போரசினர் வழங்குவார்கள். இந்த நெசவாளர் காலனி வேலை துவங்கப்பெற்றுவிட்டது."

ஓமலூரில் உள்ள மருத்துவமனையை இந்த ஆண்டு அரசாங்கத்தார் எடுத்து நடத்துவார்கள் என்றும், அரூர், ஒசூர் ஆகிய ஊர்களில் உள்ள மருத்துவமனைகளையும் அரசாங்கத்தார் எடுத்து நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்றும், எத்தாப்பூரில் உள்ள குஷ்டரோக நிவாரண மருத்துவமனையை 150 படுக்கைகள் கொண்டதாக விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சேலம் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் குருவில்லா கூறினர்.

"மத்திய ரோடு நிதியிலிருந்து சாலைகள் ஏற்படுத்த சேலம் மாவட்டம் நிதி வாங்கியிருக்கிறதா?"

என்று தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ. அவர்கள் கேட்டார்.

"சேலம் மாவட்டத்திற்கு உண்டான [illegible]தொகையை வாங்கியாகிவிட்டது" என டிவிஷனல் என்ஜினீயர் கூறினர்.

சேலத்தில் பெண்கள் கல்லூரி ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி எம். வி. கோபால் செட்டியார், ஹேமலதாதேவி எம்.எல்.ஏ. ஆகியவர்கள் பேசினர்.

தீர்மானங்கள்

கிராமங்களில் நடுத்தர காலத் தவணை கடன், நீண்ட காலத் தவணை கடன் ஆகியவைகளை வழங்க கிராம கடன் வழங்கும் சொசைடிகளுக்குத் தாராளமாக பணம் கொடுத்துதவும்படி ரிசர்வ் பாங்கி, ஸ்டேட் பாங்கி ஆகியவைகளைக் கேட்டுக்கொண்டும், சேலம் மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் எதுவும் இல்லாததால், இங்கு ஆரம்பிப்பதாக இருக்கும் இரும்புத் தொழிற்சாலை, அலுமினியம், தொழிற்சாலை ஆகியவற்றை சீக்கிரத்தில் ஆரம்பிக்க துரித நடவடிக்கைகள் எடுக்குமாறும், மின்சார வினியோகத்தைத் தேசியமயமாக்கி சேலம் மாவட்டத்தின்மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யுமாறும் அரசியலாரைக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ந. நி.)

ஆசிரியருக்குக் கடிதம்:

வடவர் ஆதிக்கம் ஒழியுமா?

ஐயா,

வடவர், தென்னகத்தாருக்கு இழைக்கும் அநீதிகள் பலப்பல. தமிழகத்திலே—குறிப்பாக சென்னைநகரிலே அந்த வடநாட்டு மார்வாடிகளும், சப்பாத்திச் சேட்களும் செய்துவரும் அநீதி தமிழ் மக்களைக் கோழைகளாக்கி வருகிறது.

சென்னை நகரில் சூளையில் 'எட்வர்ட் டெக்ஸ்டைல் மில்ஸ்' என்ற ஒரு துணி—நூற்பு ஆலை வடவரால் நடத்தப்பட்டுவருகிறது. சுமார் 3,000 தொழிலாளர்கள் ஊழியம் செய்துவரும் ஒரு ஆலை இது. இந்த ஆலை 1956-ம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து செயல்பட்டுவருகிறது. அங்கே இரண்டு முறை (ஷிப்ட்) வேலை செய்யப்படுகிறது. முதல் வேலை (ஷிப்ட்) நேரத்தில் வேலை செய்யும் ஒரு தறித் தொழிலாளிக்கு அவன் தாங்கொணுத அளவுக்கு 4 தறிகள் கொடுக்கப்படுகின்றன. நூற்புத் துறையில் ஊழியம் செய்யும் ஒரு தொழிலாளருக்கு 2 மெஷின் கொடுக்கப்படுவதுடன், பக்கவாட்டிலும் பார்த்து வேலை செய்ய வேண்டும்; இது, தொழிலாளிக்கு இரட்டிப்பு வேலையாகும்.

ஒரு கூலித் தொழிலாளருக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 42-4-0; வேறு எவ்வித கிராக்கிப் படியோ, நோயின் காரணமாக விடுமுறையோ, பண்டிகை, திருவிழா போன்ற நாட்களுக்கு விடுமுறையோ கிடையாது, இலாபத்தில் முதலாளி, தொழிலாளிக்கு ரூ. 100-100 என்ற விகிதம் கொடுக்கும்படி சட்டம் கூறுகிறது; ஆனல் அவ்வடவர்கள், சில ஏமாந்த தமிழக அதிகாரிகளை வலையில் போட்டுக்கொண்டு 'உற்பத்தி' என்ற பெயரால் 100-75 பாகம்தான் தொழிலாளருக்குத் தருகின்றனர். அத்தனைத் தொழிலாளிகளும் தற்காலிகமாம்; ஆலை துவங்கிய $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்துக்குள் நான்கு தடவைகள் வேலைநிறுத்தம் நடந்திருக்கிறது; நான்காம் தடவை வேலை நிறுத்தம் $1\frac{1}{2}$ திங்கள் நீடித்தது.

அவ்வாறு நீடித்தும் எங்கள் கோரிக்கை நிறைவேறவில்லை; செய்திகளைப் போடாமல் செய்தித் தாள்களும் இருட்டடிப்புச் செய்துவிட்டன. தொழிலமைச்சர் திரு. வெங்கடராமன் சமாசத்துக்கு ஏற்பாடு செய்தும் ஒரு பலனும் இல்லை. சமாசத்தின் காரணமாகவோ என்னவோ, 8-12-57ல், ஆலையை மூடுவதாக அறிவிப்புப் பலகைகள் ஆலையில் தொங்கவிடப்பட்டிருக்கின்றன; இது பற்றி தொழில் கோர்ட்டுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். இதைக் குறிப்பாக, நம் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கவனித்து ஆவன செய்து 3,000 தொழிலாளர்களுக்கும் நிரந்தரத்தன்மைக்கு வழிசெய்ய வேண்டுமென அத்தனைத் தொழிலாளர்களும் வேண்டுகிறோம்.

ஏ. டி. எஸ். மணி,
சைதாப்பேட்டை.
12—11—57

முகவரி:

கழக மேடைகளிலும், கலை விழாக்களிலும் இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்க:—

கே. டி. நித்தியானந்தம்
தி. மு. க. பாடகர்,
c/o பி. ஆறுமுக ஆசாரி,
திருநாவுக்கரசு ஜுவல்லரி
திருச்சி ரோடு குகை, சேலம்

முகவரி மாற்றம்:

டேப்-இராதாமாணிக்கம்,
நெ. 3. மாரிமுத்துசாலை,
தங்கசாலை தெரு, சென்னை-1

பிரகாசா பேசும் உண்மை!

'இரண்டாம் திட்டம்பற்றி எதுவுமே தெரியாது'

சென்னை, நவ. 27—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்று பம்பாய் கவர்னர் பிரகாசா மனம் திறந்து கூறியிருக்கிறார்.

"'ஐந்தாண்டுத் திட்டம்' என்று அச்சிட்ட புத்தகங்கள், பெரிய பெரிய அளவில் எனது மேஜைமீது கிடக்கின்றன; ஆனால் அவற்றை நான் பிரித்துப் பார்க்கக்கூடத் துணிந்தது இல்லை; காரணம், அவை அவ்வளவு பெரியவையா யிருக்கின்றன. யாராவது என்னிடம்வந்து ஐந்தாண்டுத் திட்டம்பற்றி ஏதாவது பேசினால், நான் அதை எல்லாம் தெரிந்தவன் போல நடிக்கிறேன். ஆனால், உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன் — எனக்கு அதுபற்றி எதுவுமே தெரியாது"

என்று, பிரகாசா அவர்கள், சென்னை 'அவ்வையக'த்தில், இரண்டாம் திட்ட விவாத அரங்கு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டம் எரித்த சாம்பல் மந்திரிக்கு!

திராவிடர் கழக கிளர்ச்சியில் ஈடுபட்டோருக்கு கடும் தண்டனை

சென்னை, நவ. 27—

திராவிடர் கழகத்தின, அரசியல் சட்டப் புத்தக நகல் எரிப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டுக் கைதானவர்களின் எண்ணிக்கை 2,500-க்கும் அதிகம் என்று பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

கைதானவர்களில் பலர் மீதும், சட்டப் புத்தகத்தை எரித்ததாகவும், எரிக்க முயற்சித்ததாகவும், புதிய சட்டத்தின் 5, 6-வது பிரிவின்கீழ் போலீசார் வழக்குத் தொடருகின்றனர் என்றும் தெரியவருகிறது.

சென்னை நகரில் கிளர்ச்சியில் ஈடுபட்ட தோழர்களுக்கு ஒன்பது மாத சிறைத் தண்டனைவரை தரப்பட்டிருக்கிறது.

நான்காவது மாகில நீதிபதி முன் கொண்டுவரப்பட்ட மூன்று பெண்கள் உட்பட 10 பேருக்கு இரண்டு மாத வெறுங்காவல் தண்டனை முதல் ஒன்பது மாத கடுங்காவல் தண்டனைவரை தந்து நீதிபதி தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

மந்திரிக்கு சாம்பல்

போலீஸ் மந்திரி பக்தவத்சலம், நிதி மந்திரி சுப்பிரமணியம் ஆகிய இருவருக்கும், இன்று தபாலில் வந்த பல அஞ்சல் உறைகளில் அரசியல் சட்ட புத்தகம் எரிக்கப்பட்ட சாம்பல் இருந்தது.

"பெரியார், தனக்குப் பிறகு தன் கட்சி இருக்கக் கூடாது என நினைக்கிறார்போலும்; அதனால், தான், இதுபோன்ற இயக்கங்களை நடத்துகிறார். இவை, அவரது கட்சிக்கு அவர் நடத்தும் இறுதிச் சடங்குகள்" என்று ஆத்திரத்தோடு கூறினாராம், நிதி அமைச்சர் சுப்பிரமணியம்!

அரசாங்கம் விழிப்புடன் இருக்கிறதாம்!

இருந்தும் ஒன்பதுமுறை திருட்டுக்களா?

புதுடில்லி, நவ. 27—

கிழக்கு இரயில்வே பகுதியில் ஒந்தல் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒயாரியா புகைவண்டி நிலையம் வரை உள்ள இரயில் பாதையில் கடந்த 10 ஆண்டுக் காலத்தில் ஒன்பதுமுறை களவாடல் நடைபெற்றுள்ளதாம்.

"இரயில்வே சொத்துக்களைப் பாதுகாக்க அக்கறை எடுத்துக் கொண்டு அரசாங்கம், இரயில்வே பாதுகாப்புப்படையை ஏற்பாடு செய்திருந்தனர்; அதற்குப்பிறகும்கூட தொடர்ந்து களவு நடைபெற்று வருகிறது" என்று, இரயில்வே துணை அமைச்சர் ஷா நவாஸ்கான், மாகிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

உடனே டாக்டர் இராதாகிருட்டினன் குறுக்கிட்டு "நீங்கள் விழிப்புடன் இருக்கிறீர்கள்; அவர்கள் அறிவாளிகளாக உள்ளனர்" என்று கூறியுள்ளார்.

இந்தியா மீது ரஷ்ய-சீன தாக்குதல்

தாம் எண்ணிப்பார்க்காதது என்கிறார் டி. டி. கிருஷ்ணமாச்சாரி

மக்கள்சபைக் கேள்விகளுக்கு பண்டித நேரு பதில்

புதுடில்லி, நவ. 27—

"இந்தியா மீது, ரஷ்யாவும் —சீனாவும் தாக்குதல் நடத்துவது சாத்தியமே என நான் கூறவே இல்லை"

என்று, நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள்சபையில் சாதித்திருக்கிறார்.

'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை நிருபருக்கு அவர் அளித்த பேட்டி ஒன்று பற்றி இன்று சரமாரியான கேள்விகள் எழுப்பப்பட்டன.

அப்போது கிருஷ்ணமாச்சாரி, "நான் கூறியதெல்லாம்—'எல்லையோரத்தில் நமக்குச் சில தொல்லைகள் இருக்கின்றன; பர்மிய எல்லையில்கூட நமக்குச் சில தகராறுகள் இருந்தன; ஏதாவது நேரிடலாம் என்ற சாத்தியக்கூறு இருக்கிறது; யாருக்குத் தெரியும்—எல்லையோரத்தில் ஏதேனும் தகராறு ஏற்பட்டால், இந்தியாவில் உள்ள சில நண்பர்கள் அதனைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும்' என்று கூறினேன்; இதனை மறுப்பதற்கில்லை; ஆனால், ஏதாவது அன்னிய அரசைப் பற்றியது என்றால், அதுவும், நம்முடன் நட்புறவு கொண்டவைகளைப் பற்றி நான் எதுவும் குறிப்பிடவில்லை என்பதை இப்போது திட்டமாகக் கூறுகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

'நியூயார்க் டைம்ஸ்' நிருபர் 'கிருஷ்ணமாச்சாரி அதுபோலக் கூறியது உண்மைதான்' என வலியுறுத்தியிருப்பதைச் சுட்டிக் காட்டினர், பல உறுப்பினர்கள்!

அப்போது சபைத் தலைவர் குறுக்கிட்டு, 'அந்த நிருபர் கூறுவதைவிட நமது நிதி மந்திரி கூறுவதைத்தானே நாம் நம்ப வேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

பல கேள்விகளுக்குப் பதிலளித்த பண்டித நேரு, 'இந்தியாவின் அன்னிய நாட்டுக் கொள்கை மாறுமோ, அடிப்படை மாற்றப்படுமோ என எவரும் அஞ்சத் தேவையில்லை' என்று உறுதி கூறியிருக்கிறார்.

இந்தியாவிற்கு அமெரிக்க உதவி

30கோடி டாலர் கிடைக்க ஷெர்மன் கூறும் உபாயம்

நியூயார்க், நவ. 26—

இந்தியாவிற்கு அமெரிக்காவின் உதவி 30 கோடி டாலர் வரை கிடைக்கும் என்று செனட்டர் ஷெர்மன் கூப்பர் கூறினார்.

"கோதுமை வாங்கிய வகையில் திருப்பிக் கொடுக்கும் தொகையை டாலராகவே செலுத்த வேண்டுமென வற்புறுத்தாமல் ரூபாயாகக்கொடுக்க அனுமதித்தல்; மேற்கொண்டு உணவுப் பொருள் தருவதையும் இந்த வகையிலேயே செய்தல்; இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பாங்கி மூலம் சுமார் 15 கோடி டாலர் கடன் அளித்தல்—ஆகிய மூன்று வழிகளில் இந்த உதவி தரக்கூடும்" என்றார் அவர்.

இதற்கு அமெரிக்க காங்கிரசின் தனி அனுமதி எதுவும் தேவை இல்லையாம்!

வகுப்புகள் அடிப்படையில் விடுதிகள் கூடாது

பெங்களூர், நவ. 26—

ரூ. 49,000 செலவில் கட்டப்பட்டுள்ள 'கோரம செட்டார விடுதியின் கால்கோள் விழாவின் போது மைசூர் மாநில நிதி அமைச்சர் மாரியப்பா பேசுகையில், 'நாட்டில் வகுப்புகள் பெயரால் உள்ள விடுதிகள் ஒழிக்கப்பட வேண்டும்' என்று கூறியுள்ளார்.

தாமதத்திற்குக் காரணம் திட்டக் குழுவாம்!

சென்னை, நவ. 27—

"தனி நபருக்கு அதிகப்படியாக இருக்கக் கூடிய நிலத்திற்கு வரம்பு நிர்ணயிக்கும் சட்டத்தை சென்னை அரசாங்கம் 1958-ல் அடையக் கூடும்" என்று அமைச்சர் மாணிக்கவேலர், நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

திட்டக் குழுவின் சிபாரிசுகள் கிடைக்காததே தாமதத்திற்குக் காரணமாம்.

நிசாம் சர்க்கரை ஆலை மோசடி!

மத்திய அரசாங்கம் விசாரணை நடத்தாது

புதுடில்லி, நவ. 27—

நிசாம் சர்க்கரை ஆலை மோசடி பற்றி மக்கள்சபையில் கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கிறது.

இந்த ஆலையில் 70 சதவிகிதம் ஆந்திர அரசு முதலீடு செய்துள்ளது.

இலஞ்ச ஊழல், நிர்வாகக் குறைவு முதலிய பல குற்றச்சாட்டுகள் இந்த ஆலைபற்றி கூறப்பட்டுள்ளது.

சமீபத்தில் மத்திய உணவு அமைச்சர் ஆந்திர மாநிலத்திற்கு வந்திருந்தபோது இதைப்பற்றி ஒன்றுமே செய்யவில்லையாம்.

'இதுகுறித்து மத்திய அரசாங்கம் விசாரணை நடத்தமுடியாது' என்று உதவி உணவு அமைச்சர் தாமஸ் தெரிவித்துள்ளார்.

இந்த ஆலை சென்ற ஆண்டு இலாபத்தில் இயங்கியுள்ளதே இந்த முடிவுக்குக் காரணமாம்.

நிர்வாகக் குறைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு மாநில சர்க்காரைச் சேர்ந்தது என்று அவர் கூறியுள்ளார்.

கேரளத்தில் கழக முழக்கம்

★

1—12—57 அன்று கேரள மாநிலத்தைச் சேர்ந்த வண்டிப்பெரியாரில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., கே. எச்.எம். சுபேர், கே. ஏ. கலையழகன் ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

பெங்களூர்:

(சிவன்செட்டி வட்டம்)

சங்கரநாராயண சபையில்

30—11—57 மாலை 5 மணிக்கு

தலைவர்: ஜே. கனகசுந்தரம்

பேசுபவர்: என். எஸ். இளங்கோ

மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றத்தில் அண்ணு படத் திறப்பு

29—11—57 இரவு 7 மணியளவில், திருத்துறைப்பூண்டியை அடுத்த மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றத்தில் தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களால் அண்ணு அவர்களின் படமும், புதிய வானொலி நிலையமும் திறந்து வைக்கப்படும். தோழர் அறிவுடைநம்பி திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களுடைய படத்தைத் திறந்துவைப்பார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

30—11—57 மாலை 6 மணிக்கு சென்னை-கோடம்பாக்கம் புலியூர் அறிவு வளர்ச்சி மன்றத்தில் தோழர் ஆ. ர. துரையரசன் தலைமையில் தோழர்கள் ரா. வரதன், அருணசலம் ஆகியோர் பேசுவர்.

* * *

30—11—57 இரவு 8 மணிக்கு சேலம்-பொன்னமாப் பேட்டை தி. மு. க. சொற்பயிற்சிமன்றக் கூட்டம் தோழர் கே. ஆர். மாசிலாமணி தலைமையில் நடைபெறும். தி. மு. க. இலட்சியம் குறித்து தோழர்கள் பி. கே. மன்னூர், கே. வ. வெங்கடாசலம், கே. ஆர். பத்மய்யா, கே. எஸ். மணி, மற்றும் பலர் பேசுவர்.

* * *

30—11—57 இரவு 8 மணிக்கு சேலம் வன்னியர் வளர்ச்சிக் கழகக் கட்டிடத்தில் (பட்டக் கோவில் அருகில்) தோழர் எஸ். எ. அன்புக்கரசு தலைமையில் 'திராவிட நாடு பிரிவினை' என்பதுபற்றிப் பலர் சொற்பொழிவாற்றுவர்.

ஆந்திராவில் ஒரு நீர் மின்சாரத் திட்டம்

மூன்றும் திட்டத்தில் இடம்பெறும் என்கிறார் மந்திரி

புதுடில்லி, நவ. 26—

"ஆந்திர மாநிலத்தின் சிலேறு நீர் மின்சாரத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்" என்று மாநிலங்கள் சபையில் மந்திரி எஸ். கே. பட்டீல் கூறியிருக்கிறார்.

திட்டம் பற்றி பூரணமாக ஆராய்வதற்காக இரண்டாம திட்டத்தில் ரூ. 5 இலட்சம்வரை பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், முடிந்ததும், மூன்றும் திட்டத்தில் அது சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் தெரிவித்திருக்கிறார்.

புதுவையில் 60 ஓராசிரியர் பள்ளிகள் திறப்பு

காரைக்கால், நவ. 26—

1956-57-ல், புதுவை மாநிலத்தில் மொத்தம் 60 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன என்று ஒரு அரசாங்க அறிக்கை கூறுகிறது.

அரசாங்கத்தின் மீன் இலாகா திட்டங்களுக்காக ரூ. 1,16,000 ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

காணவில்லை

எனது மருமகன் கே. நாராயண சாமி என்பவர் 3 ஆண்டுக் காலமாக புத்தி சுவாதீனமில்லாமலிருந்தவர்—சென்ற 1 மாதத்திற்கு முன்பு வீட்டிலிருந்தவர் எங்கேயோ சென்றுவிட்டார். பல இடங்களில் தேடியும் காணவில்லை; அவரைக் கண்டவர்கள் என் முகவரிக்குத் தெரிவிக்குமாறு வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். நிறம்—சிவப்பு; வயது—35; உயரம் 5½ அடி; தலை—கிராப்பு அடையாளமுள்ளவர்.

கே. கே. நீலமேகம்,
மும்மூர்த்தி விநயகர்
சுருட்டு கம்பெனி, கும்பகோணம்

மு. கருணாநிதி

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

நவம்பர்

28: மாலை-கோபிசெட்டிப் பாளையம் பொதுக்கூட்டம்
இரவு-புஞ்சைப் புளியம்பட்டி நாடகம்
29: குளித்தலைத் தொகுதி வெள்ளியணைப் பகுதியில் சுற்றுப்பயணம்
30: அய்யர்மலை கூட்டம்

டிசம்பர்

1: வண்டிப் பெரியார்
2: மாலை 4 மணி-கம்பம் பொதுக் கூட்டம்
மாலை 6 மணி - தேனி பொதுக்கூட்டம்
3: திருமங்கலம்
4: மேலூர்
15: மதுராந்தகம்

[மதுரை மாவட்டத்தில் நடக்கும் கூட்டங்களில் மட்டும் மாவட்டச் செயலாளர் எஸ். முத்து அவர்களும் கலந்துகொள்ளுவார்.]

க. அன்பழகன்

எம். எல். ஏ.

ஊராண்மைக் கழக வரவேற்புகள்

29—11—57 மாலை 5 மணிக்கு, திருவாரூரையடுத்த காட்டூருக்கு வருகைதாவிருக்கும் தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கட்கு, மேற்படியூர் ஊராண்மைக் கழகத்தின் சார்பில் தலைவர் கா. வை. இராமையா வரவேற்பு இதழ் வாசித்தளிப்பார்.

* * *

அன்று இரவு 7-30 மணிக்கு, திருத்துறைப்பூண்டியடுத்த மேட்டுப்பாளையம் ஊராண்மைக் கழகச் சார்பில் திரு. க. அன்பழகன் அவர்கட்கு தலைவர் கு. சண்முகம் அவர்களால் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்படும்.

சென்னை 34-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

30—11—57 இரவு 8 மணிக்கு சென்னை—நுங்கம்பாக்கம் இராமநாய்க்கன் தெரு, 8-சி எண்ணுள்ள தி. மு. கழகக் கிளை பணிமனையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் 'பொங்கல் விழா' பற்றி முடிவெடுக்கப்படும்.

நக்கீரர் பட்டி மன்றம்

30—11—57 மாலை 6-30 மணிக்கு பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்றச் சார்பில் முருகேசமுதலித் தெரு 2-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழர் ந. ரா. கலைச்செழியன் தலைமையில் தோழர்கள் முத்தெழிலன், முடியரசன் ஆகியோர் 'வள்ளுவர் கண்ட அரசியல்' என்பதுபற்றிப் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.